இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

★ வார இதழ் ★ இதழ் 378 ★ 1988 ஜனவரி 15 வெள்ளிக்கிழமை ★ விலை 1 – 50 சதம்

# தோழர் கீர்த்தி பாலசூரியாவிற்கு இறுதி மரியாதை

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளராக விளங்கி மறைந்த தோழர். கீர்த்தி பாலசூரியாவிற்கு இறுதி மரியாதை தெரிவிக்கும் பொருட்டு, டிசம்பர் 23 ம் திகதி ஆபிரக்கணக்கானோர் திரண்டிருந்தனர் அனைத்துலகக் குழுவின் பிரதிநிதிகள், பு. க. கழகத்தினதும் 'இளம் சோஷலிஸ்டுகள்' இனதும் அங்கத்தவர்கள், தொழிலாளர், இளைஞர், தோழர் கீர்த்தியின் உறவினர் என்போர் இவர்களிடையே அடங்குவர்.

இந்த ரொட்ஸ்கிச தலைவரின் புரட்சிகர போராட்டத்துக்குரிய வகையில், இறுதிச் சடங்கு நடவடிக்கைகள் கம்யூனிச மரபுக்கேற்ப நடைபெற்றன. மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் தோழர். கீர்த்தி பாலசூரியாவின் திடீர் மரணத்தினால் உலகத் தொழிலாள வர்க்கத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்பினையிட்டு ஆழ்ந்த கவலையை தெரிவித்தனர். அனைத்துலகக் குழுவின் சகல கிளைகளும் அதன் தலைவர் ஒருவரான தோழர். கீர்த்தி பாலசூரியாவின் இறப்புக் குறித்து ஆழ்ந்த கவலையை அவர் வழங்கிய தலைமைத்துவத்தின் பொறுப்புப் பற்றி நினைவூட்டிய வண்ணம் தெரிவித்தன.

தோழர். கீர்த்தி பாலசூரியாவின் பூதவுடல் 'இறுதி மரியாதைக்காக அவர் மறைந்த டிசம்பர் 18 ம் திகதிக்கு மறு நாள் பரண விகா

★ 7 ம் பக்கம் பார்க்கவும்



தோழர். கீர்த்தி பாலசூரியாவின் பூதவுடல் பு. க. க. தலைமைக் காரியாலத்தில் வைக்கப்பட்டிருக்கும் போது அவரது மனைவியும் பு. க. க. உறுப்பினருமான தோழி விலானி பீரிஸ் இறுதி மரியாதை செலுத்துகின்றார்.

## "கீர்த்தியின் வாழ்க்கையின் ஒரே இலக்கு

# அனைத்துலக கட்சியை கட்டி எழுப்புவதே"

### தோழர். விஜே டயஸ்

இந்தச் சோகமான வேளையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சகல கிளைகளும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் இணைந்து நிற்பதையிட்டு நாம் பெருமை அடைகின்றோம்' என பு. க. க. மத்திய குழு உறுப்பினரான தோழர். விஜே டயஸ் குறிப்பிட்டார்.

தோழர். கீர்த்தியின் உடல் கனத்தையில் தகனம் செய்யப்படுவதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது: தோழர். கீர்த்தியின் மறைவு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு மட்டுமே அன்றி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கும் அளப்பரிய இழப்பாகும் என புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் உலக சோசலிசப் புரட்சிக்காகப் போராடிய தலைவர். தோழர். கீர்த்தியையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் வேறுபடுத்தி விட முடியாது. அவர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளையைக் கட்டி எழுப்பும் ஒரே இலக்கில் போராடி வந்தார்.

"தோழர். கீர்த்தியின் வரலாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வரலாறாக பொறிக்கப்படும். அவர் 1965 ல் க. பொ. த. (உயர்தர) வகுப்பு மாணவனாக விளங்கிய சமயத்தில் அரசியலில் ஈடுபட்டார். பாடசாலையில் கீர்த்தி சிறப்பு மாணவனாக விளங்கினார். தொழிலாள வர்க்க இளைஞர்களை தம்முள் அரவணைத்து அவர்களை புரட்சியாளர்களாய் போஷிக்கும் சக்தியை தொழிலாள வர்க்கம் கொண்டிருந்தது. தோழர். கீர்த்தி அந்த இளைஞர் குழாத்தைச் சேர்ந்து விளங்கிய போதிலும் தொழிலாள வர்க்கத்தின் இரத்த புறநிதியான பணியுடன் நின்று கொள்ள அவர் முடிவு செய்யவில்லை

அவர் தொழிலாள வர்க்க இயக்கத்தின் உள்ளே தலைமை நெருக்கடியை தீர்த்து வைக்கப் போராடிய ட்ரொட்ஸ்கிச இயக்கத்துக்கு — புரட்சிக் கட்சி ... நிரப்ப வேண்டிய தீர்க்கமான பணி

★ 8 ம் பக்கம் பார்க்கவும்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரதான தலைவரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளருமான மறைந்த

## தோழர். கீர்த்தி பாலசூரியாவின் புரட்சிகர வாழ்க்கையும் போராட்டமும் பற்றிய அஞ்சலிக் கூட்டம்



[1948 - 11 - 04 — 1987 - 12 - 18]

புதிய நகரமண்டபம் கொழும்பு
1988 ஜனவரி 30 சனி பி. ப. 4.30 மணி
கண்காட்சி ஆரம்பம் பி. ப. 2 மணி

கட்டுகலை இந்து கலாச்சார மண்டபம்
1988 பெப்ரவரி 10 புதன் மாலை 4.30 மணி
கண்காட்சி ஆரம்பம் பி. ப. 2 மணி

## வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் கீர்த்தி பாலசூரியாவின் மரணச் சடங்குக் கூட்டம்

# நிரந்தரப் புரட்சிக்கான போராட்டம்

தோழர். கீர்த்தி பாலசூரியாவின் மரணச் சடங்கு கூட்டத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக யாழ் பிரதிநிதி அரவிந்தன் ஆற்றிய உரை

தோழர். கீர்த்தி பாலசூரியாவின் மரணம் உலகத் தொழிலாள வர்க்கத்திற்கும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். தோழர். கீர்த்தி இருபத்திரண்டு வருடங்கள் தனது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்து நடாத்திய போராட்டத்தின் பலாபலன்கள் தொழிலாள வர்க்கத்திற்கு என்றுமில்லாதவாறு தேவைப்படும் நேரத்தில் அவர் எங்களை விட்டுப் பிரிந்தது மிகவும் துரதிஷ்டமானது.

தோழர். கீர்த்தி பாலசூரிய டிசம்பர் 18 ம் திகதி எமது கட்சித் தலைமை அலுவலகத்தில் இருந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது அவரின் உயிர் பிரிந்தது. அவர் அன்று அலுவலகத்திற்கு வந்த நேரமான காலை 9 மணியில் இருந்து அவரின் உயிர் பிரிந்த நேரம் வரை அவரின் நடைமுறையை நாங்கள் அவதானிப்போமாயிருந்தால் அவரின் அரசியல் வாழ்க்கையின் உன்னதத் தன்மையைக் கணிக்க முடியும்.

தோழர். கீர்த்தி காலை அலுவலகத்திற்கு வந்தவுடன் சிலாபத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஹெலிஸ் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் சம்பந்தமாக, அதில் தலையீட்டு வந்த தோழருடன் கலந்துரையாடினர். அப்போராட்டம் சம்பந்தமாக எமது கட்சித் தோழர் ஒருவர் காட்டிய அசிரத்தையையிட்டு சற்று கோபம் அடைந்திருந்தார். பின்பு கண்டியில் எமது தோழரை கைது செய்ய வந்த பொலிசார், அவரின் பெற்றோரை பணயக் கைதிகளாக கொண்டு சென்ற விடயம் பற்றி, அங்கிருந்து வந்திருந்த தோழருடன் கலந்துரையாடி அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனையை வழங்கினார் இதற்குப் பிற்பாடு கடைக்குச் சென்று தேனீர் அருந்திவிட்டு எழுத்து வேலையில் ஈடுபட்டார்.

அவர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டிய கோவையை [Document] தயாரித்துக் கொண்டிருந்தார் அவர் அப்பொழுது எனக்குக் கூறினார் 'இந்த வேலையை எப்படியாவது முடித்து இன்று தபாலில் அனுப்ப வேண்டும் என்றார். ஆனால் எழுதிக் கொண்டிருக்கும் போதே மயக்கமாகி விழுந்தார். அவரின் உயிர் சிறிது நேரத்தில் பிரிந்து விட்டது.

தோழர். கீர்த்தி தனது இறுதி நிமிடத்தையும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் தேவைகளுக்காக அர்ப்பணித்தார்.

தோழர். கீர்த்தியின் அரசியல் வாழ்க்கையில் 1970 — 1972 ம், 1985 — 87 ம் ஆகிய ஆண்டுகள் உலக முக்கியத்துவம் வாய்ந்தவை 1971 ம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வங்காளதேச விடுதலைப் போராட்டத்தை நசுக்க தலையிட்ட போது அதற்கு ஆதரவு கொடுத்த பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியை சேர்ந்த ஹீலி, பண்டா, சுலோற்றர் தலைமைகளுக்கு எதிராக, புரட்சிக் கம்யூனிஸ்ட் சழகத்தின் சார்பாக, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்குள் போராடினர்.

அதாவது ரூஷ்ய புரட்சியின் மையமாக விளங்கிய ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை குழிதோண்டிப் புதைக்க இந்த ஓடுகாலிகள் முயற்சித்த போது. அதற்கு எதிராக தீர்க்கமாக போராடினர். அப்பொழுது அவரின் வயது 23 மட்டுமே.

1985 ம் ஆண்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்குள், அமெரிக்க வேர்க்கஸ் லீக் பொதுச் செயலாளர் தோழர் டேவிட் நோத் தொழிலாளர் புரட்சிக் கட்சியின ஹீலி பண்டா சுலோற்றர் தலைமைகளுக்கு எதிரான போராட்டத்தை வெளிப்படையாக ஆரம்பித்த போது, தோழர் கீர்த்தி அவருடன் இணைந்து அவர்களை முற்றாக அம்பலப் படுத்தி, தோற்கடிப்பதில் முக்கிய பங்கு வகித்தார். இப்போராட்டம் மார்க்சிசத்தின் தொடர்ச்சியாக, அதாவது ட்ரொட்ஸ்கிசத்தின் தொடர்ச்சிக்காக தொடுத்த போராட்டத்தின் முக்கிய பாகமாகும் இதன் மூலம் தோழர் கீர்த்தியின் மார்க்சிசத்திற்கான போராட்டத்தின் உலக முக்கியத்துவம் வெளி உலகத்திற்கு தெரிய வந்தது.

எனவே தான் தோழர். கீர்த்தி பாலசூரிய தேசிய ரீதியாக அன்றி உலகத் தொழிலாள வர்க்கத்தின் தலைவராவர். ஏற்கனவே இங்கு பேசிய தோழர்கள் கூறியது போல் அவர் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ட்ரொட்ஸ்கியின் வரிசையில் வைக்கப்பட வேண்டியவராவர்

இலங்கையில் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் தோழர். கீர்த்தி கடந்த காலத்தில் மார்க்சிசத்திற்காக தொடுத்த போராட்டம் உயிர்த் துடிப்பு உள்ளதாக இருக்கின்றது. இந்திய — இல

★ 6 ம் பக்கம் பார்க்கவும்

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்...

★ 3 ம் பக்கத் தொடர்ச்சி

எசன்
டிசம்பர் 21

அன்பின் தோழி விலானி பீரிசுக்கு,

தங்களுக்கு எமது ஆழ்ந்த நிச வருத்தங்களை தெரிவிக்கின்றோம். தோழர். கீர்த்தியின் துடீர் சோகம் மிக்க மரணத்தினால் நாம் எமது மிக முக்கிய காரியாளரையும், ஒரு ட்ரொட்ஸ்கிச போராளியையும் பல வருடகால நெருங்கிய நண்பரையும் இழந்து விட்டோம். அவரின் நினைவு எமது இயக்கத்துள் சதாகாலமும் உயிர் வாழும்.

பீற்றர் சுவாரீஸ்
செயலாளர்,
நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு.
யூலி ஹிபம்பர்ட்
தேசிய செயலாளர்,
யு. எஸ். ஏ.

கொட்டகலை
டிசம்பர் 21

மத்திய குழுவிற்கு,

கீர்த்தியின் மரணத்தையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

நாகலிங்கம்

கிளாஸ்கோ
ஷெவ்பீல்ட்
டிசம்பர் 22

அன்பின் தோழர்களுக்கு,

தோழர். கீர்த்தி பாலசூரியாவின் மரணத்திற்கு நாம் எமது ஆழ்ந்த இதயம் தோய்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம். அவர் ஓர் [illegible] பெரும் புரட்சியாளன் உணர்ச்சி மிக்க ஆசான். அவரின் நினைவு, எமது இயக்கத்தின் சகல பணிகளிலும் உயிர் வாழும்.

டீ ஹைலண்ட்
இன்டர்நஷனல் கொம்யூனிஸ்ட் கட்சி சார்பில்
நா அ. அ. குழுவின் பிரித்தானியப் பகுதி

சென்னை
இந்தியா
டிசம்பர் 23

பயணம் செய்ய முடியவில்லை. எமது உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் ஒரு துணிவும் கொள்கைப் பற்றும் கொண்ட தலைவர் தோழர். கீர்த்தியின் ஈடு செய்ய முடியாத இழப்புச் செய்தி கேட்டு சோசலித் தொழிலாளர் கழகம் [S L L] அதிர்ச்சி அடைந்தது. அவர் உயர்த் தியாகம் செய்த போராட்டத்தினைத் தொடர நம் சபதம் பூணுகின்றோம் கீர்த்தியின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

சோ. தொ. க.

## பு. க. கழக புதிய பொதுச் செயலாளர்

கடந்த தினங்களில் கூடிய புரட்சிக் கம்யூனிஸ்ட் மத்திய குழு, கழகத்தின் புதிய பொதுச் செயலாளராக தோழர் விஜே டயஸை நியமித்தது. தோழர். விஜே டயஸ் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆரம்ப உறுப்பினர் ஒருவராக விளங்கியதுடன் மத்திய குழு உறுப்பினராக செயலாற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுச் செயலாளர் தோழர். கீர்த்தி பாலசூரியாவின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளும் அனுப்பிய அனுதாபச் செய்திகள்

எசன்
டிசம்பர் 21

அன்பின் தோழர்களுக்கு,

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சார்பில் நான் எமது நிசமான அனுதாபங்களை தாங்களுக்கு தெரிவிக்கின்றேன். தோழர். கீர்த்தி பாலசூரிய, எமது மிக முக்கியமான, மதிப்புக்குரிய தோழர்களில் ஒருவர். அவரது பணிகளும், அவரின் கொள்கைப் பற்று மிக்க போராட்டமும் எமது எதிர்கால வேலைகளில் உயிர் வாழும்

பீற்றர் சுவார்ஸ்,
செயலாளர்,
நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு

---

எசன்
டிசம்பர் 21

அன்பின் தோழர்களுக்கு,

[நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் பகுதியான] பீ எஸ். ஏ. யின் மத்திய குழு தனது நிச அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றது. தோழர். கீர்த்தி பாலசூரியாவின் திடீர் துன்பகரமான மரணம் எமக்கு ஒரு அதிர்ச்சியும் வருத்தமும் நிறைந்த இழப்பாகும். ஒரு ட்ரொட்ஸ்கிச போராளி என்ற முறையில் அவரின் வாழ்க்கையும் போராட்டமும் எமக்கு ஒரு மாபெரும் எடுத்துக் காட்டாகும். எதிர் காலத்தில் பல தோழர்களை அது ஈர்க்கும்.

யூலி ரிப்பேர்ட்,
தேசிய செயலாளர்,
பீ. எஸ். ஏ.

---

பாரிஸ்
டிசம்பர் 23

அன்பின் தோழர்களுக்கு,

தோழர் கீர்த்தியின் திடீர், சோக மரணம் கேட்டு அதிர்ச்சியுற்றோம். நாம் எமது ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றோம் இது அனைத்துலக இயக்கத்துக்கு ஓர் பேரிழப்பாகும் தோழர். கீர்த்தியின் முன்மாதிரி என்மையும் இன்னும் பல புரட்சிகரப் போராளிகளை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பதாகைக்கு ஈர்க்கின்றது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின்
அனுதாபம் மிக்க தோழர்கள்,
பிரான்ஸ்

❀ 2 ம் பக்கம் பார்க்கவும்

---

சிட்னி;
அவுஸ்திரேலியா;
டிசம்பர் 20

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு,

சோசலிஸ்ட் லேபர் லீக்கின் அரசியல் குழு, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் அதன் சகல உறுப்பினர்களுக்கும் தோழர். கீர்த்தியின் சோகம் மிகுந்த மரணத்தையிட்டு தனது ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றது. இப்பேரிழப்பு உங்களைப் போலவே எமக்கும் பேரிழப்பாகும். அது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கும் அதன் கிளைகளுக்கும் வீழ்ந்த ஓர் அடியாகும். இலங்கையிலும் அனைத்துலகிலும் ட்ரொட்ஸ்கிசத்துக்கான போராட்டங்களில் தோழக. கீர்த்தி அழிக்க முடியாத பாத்திரம் வகித்துள்ளார். இளைஞனாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் சேர்ந்த நாளில் இருந்து சகல வகையான கலைப்புவாதங்களுக்கு எதிராக அனைத்துலகக் குழுவை காக்கும் பொட்டு கடந்த இரண்டு ஆண்களும் தீர்க்கமான சேவையாற்றினர். அவரின் முழு வாழ்க்கையும் எமது இயக்கத்தின் உயர்ந்த இலட்சியங்களைப் பிரதிபலித்தது. தம்மை அர்ப்பணம் செய்த சோசலிசப் புரட்சியின் நோக்குகளுக்கு அவர் ஈட்டிய பயபக்தி மிக்க தியாகம் எம அனைவருக்கும் அவர் காட்டிய பாதையில் எதிர்காலத்தில் பயணம் செய்பவர்களுக்கு ஓர் முன்மாதிரியாகவும், உந்து சக்தியாகவும் விளங்கினா. தோழா கீர்த்தி பற்றி அறியவும் அவருடன் சேர்ந்து தொழிற் படவும் எமக்கு வாய்ப்புக் கிடைத்தது பெரும் வரப்பிரசாதமும், கௌரவமும் ஆகும். அவரின் வாழ்க்கையும், நூல்களும் எதிர்காலப் போராட்டத்தில் எமக்கு வழி காட்டும். எமது ஆழ்ந்த கவலையை அவரின் குடும்பத்தினருக்கும் அவரின் மனைவி தோழி விலானிக்கும் தெரிவிக்கம். பு க க வின் சகல தோழர்களுக்கும் நாம் பின்வருமாறு கூறி வைக்கின்றோம்: தங்களின் இழப்பு எமது இழப்பாகும் இத்துன்பகரமான தருணத்தில் தங்களுடன் இணைந்து முன் சென்று தோழர் கீர்த்திக்கு உந்துதலை வழங்கிய மனித இனத்தின் சோசலிச எதிர்காலத்தினை சிருஷ்டிக்கும் எமது முயற்சியை இரட்டிப்போம். நாமும் தங்களுடன் சோகத்தில் பங்கு கொள்கின்றோம்.

நிக் பீம்ஸ்
சோசலிஸ்ட் லேபர் லீக்கின் சார்பாக

---

ஸ்டர்ட்காட்
மேற்கு ஜேர்மனி
டிசம்பர் 22

கீர்த்தி கறை படியாத, தூய அனைத்துலகவாதி. அவர் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்துக்கு தனது கொள்கையையும், விதிமுறையையும் விட்டுச் சென்றுள்ளார்.

— பு க. க, ஸ்டர்ட்காட் கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய — இலங்

# புரட்சிக் கம்யூனிஸ்ட்

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்

**பின் தங்கிய நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கத்தின் நம்பிக்கை மோசடி, பிற்போக்கு பண்பு ஏற்கனவே இந்நூற்றுண்டின் எண்ணற்ற துன்பியல் அனுபவங்களின் மூலம் போதிய அளவில் வெளிப்பாடாகாது இருந்திருக்குமானால் இந்திய — இலங்கை உடன்படிக்கையின் கைச்சாத்தும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்திய ஆக்கிரமிப்பும் ஒடுக்கப்படும் பாட்டாளிகளுக்கு இன்னுமோர் கசப்பான அனுபவத்தை தந்துள்ளது.**

காந்தி — ஜயவர்தன நடவடிக்கைகளில் ஏதும் விந்தை இருப்பின், அது குறைகாணும் போக்கு, மூர்க்கத்தனத்தின் அளவீடுகளுடன் தமது கூட்டுச் சதியினை நிறைவேற்றியதே. தேசிய முதலாளி வர்க்கப் போக்கிரிகளின் சுடுகாட்டில் இவ்கொலைகாரர்களும் சியாங்கை சேக், சாதத், மொபூடு போன்ற சிரஞ்சீவி ஏகாதிபத்திய கைக் கூலிகளுக்கு அருகே தமக்கோர இடத்தினை வெற்றி கொண்டுள்ளனர். தமது இரண்டு நாடுகளின் எதிர்காலத்தில் இந்தய — இலங்கை தேசிய முதலாளி வர்க்கம் ஏதும் முற்போக்குப் பாத்திரத்தினை வகிக்க இடமுண்டு என்ற நப்பாசைகள் ஜயவர்தன — காந்தி கொள்கைகள் அடியோடு சிதறடித்துள்ளன.

(2) பல தசாப்தங்களாக இந்திய முதலாளி வாக்கம் காந்தியம் எனப்பட்ட வரலாற்று விளக்கங்களை விளக்கத்தின் மகிமையில் குளிர் காய்ந்து வந்துள்ளது. காங்கிரஸ் கட்சி சுருக்களின் ஊசலாடும் ஊழல்களுக்கு ஒரு திரையாக மகாத்மாவின் அரசியல் தந்திரம் மிக்க சுய நலமின்மையால் தடுமாறி கதவின்றி வழ்படும் வெகு ஜனங்களை இன்னமும் சுரண்டிக் கொண்டுள்ளது. தம் உலகுக்கு 'கூட்டுச் சேராமையின்' தூவில் புனிதராகக் காட்டி வரும் அதே வேளையில் இந்திய முதலாளி வாக்கம், உலகின் நான்காவது பெருஞ் இராணுவ பலத்தினால் அமைதியாகவும் ஏதேச்சாதிகாரமான முறையிலும் தென் ஆசியாவில் ஏகாதிபத்திய நலன்களை பேணிக் காத்ததோடு தனது சொந்த நாட்டிற்கு உள்ளேயே எண்ணற்ற ஒடுக்கப்படும் தேசிய இனங்களின ஜனநாயக அபிலாசைகளை துவம்சம் செய்து உள்ள. தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் கலந்து கொண்டமைக்கான சிறிதளவேனும் வரலாற்றுப் பெருமை கூட இல்லாத இலங்கை முதலாளி வர்க்கம் தனது மேலாதிக்கத்தை நியாயப்படுத்த புவியியல் சபலங்களையும் விஜயன், துட்டுகைமுனு, பராக்கிரமபாகுகளின் விநோதமான கட்டுக் கதைகளையும் தேடியது.

(3) 1948 ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிப்பும், 1956 ல் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து மறுக்கப்பட்டதில் இருந்து 1983 ம் ஆண்டின் தமிழர் விரோத சலவரங்களும் அதன் பின்னைய வடக்கு — கிழக்கு மாகாண ஆக்கிரமிப்பும் இலங்கை முதலாளி வர்க்கம் — ஓர் முறிவுண்ட அறிக்கை போல் தனது இரத்தம் தோய்ந்த குற்றங்களை இடைவிடாது பேணி வந்தது. ஐக்கிய அரசின் இறைமையை காப்பதாகக் கூறிக் கொண்டே இவற்றைச் செய்து வந்தது. தமிழருக்கு எதிரான தனது யுத்தத்துக்கு மக்கள் ஆதரவை திரட்டும் பொருட்டு மிகவும் புராதனமான வெளிநாட்டு காழ்ப்புணர்வு பாணியில் இந்திய 'விஸ்தரிப்புவாதத்திற்கு' எதிராக சிங்கள இனம் ஒரு இறுதி முயற்சி எடுப்பதாக கூறிக் கொண்டது. எவ்வளவுக்கு எவ்வளவு இது கிராமிய ஜனங்களின் வாழ்க்கையின் அடிப்படை தேவைகளை நிராகரித்ததோ அவ் ளவுக்கு அவ்வளவு அதிகமாக (இரண்டு முக்கிய முதலாளித்துவக் கட்சிகளும்) யூ. என். பியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் விவசாயிகளை தமிழர் விரோத இனவாத நஞ்சினுள் மூழ்கடிக்க முயன்றனர்.

(4) இதே சமயம், அயோக்கியமான புதுடில்லி சூழ்ச்சிக்காரர்கள் இலங்கைத் தமிழர்களின் நிலைபற்றி நன்கு பிரசித்தமான முறையில் முதலைக் கண்ணீர் வடித்ததோடு சிங்கள இனப் படுகொலைகளில் இருந்து வர்களைக் காக்கும் பக்திமான் ஆகவும் காட்டிக் கொண்டனர். இதற்குப் பிரதியீடாக தேசிய இயக்கக் கொள்கைகள் மீது முழு அளவிலான இரத்து (பீட்டோ) அதிகாரத்தை வேண்டி நின்றது.


(5) இறுதியில், இந்த மோசடி நடிப்புக்களை வழி நடத்திய கொலைகார வர்க்க நலன்கள் குருட்டுத் தனமான தெளிவுடன் அம்மலமாக்கப்பட்டன. ஜயவர்தனவின் சிங்கள தேசிய இறைமையினை பேணவும், காந்தியின் தமிழர் சுதந்திரக் காப்பும் தாம் எம் மக்கள் சார்பில் பேசிக் கெண்டனரே" அதே மக்களுக்கு எதிரான ஒன்றுபட்ட இராணுவப் பிரச்சாரத்தில் ஈடுபடும் அசிங்கமான காட்சியினுள் நாற்றம் எடுத்தன. ஜயவர்தன வடக்கு — கிழக்கு மாகாணங்களை காலவரயறையற்ற எதிர்காலத்துக்கு இந்திய இராணுவத்திடம் கையளித்துள்ளார். வடக்கில் உள்ள தமிழர்களை ஒழித்துக் கட்டுவதில் நான்கு ஆண்டுகள் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவம், வறிய சிங்கள தொழிலாளர், விவசாயிகளை ஒடுக்க தெற்கே அனுப்பப்பட்டு உள்ளது. இந்தியர்களைப் பொறுத்த மட்டில் அவர்களின் தமிழ் மக்களை காக்கும் நடவடிக்கை, அவர்களை நிர்மூலமாக்கும் முழு அளவிலான ஒரு தாக்குதலை நடத்துவதினுள் கரைக்கப்பட்டுள்ளது. இந்தியர்களின் நடவடிக்கைகள், ஹியூவை தரைமட்டம் ஆக்குவதை நியாயப்படுத்திய வீயட்நாமில் இருந்த அமெரிக்க படைத் தளபதியின் வார்த்தைகளை நினைவுக்கு கொணர்கிறது:

''ஒரு நகரத்தைக் காப்பாற்றுவதற்கு, சில வேளைகளில் அதனை நிர்மூலமாக்குவது அவசியம்'' இங்கு இந்தியர்கள் ஒரு தேசிய இனத்தைக் 'காப்பாற்ற' அதன மக்களை நிர்மூலமாக்கும் படி பிரேரிக்கின்றனர்.

(6) இலங்கை முதலாளி வர்க்கத்தின் நடவடிக்கைகளுக்கு பல வரலாற்று முன் உதாரணங்கள உள. இச் சமயத்தில் 1871 ல் பாரிஸ் தொழிலாள வர்க்க கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக பிரான்சிய இராணுவம் பிரெஸ்சியன் இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்தமையையும் 46 வருடங்களின் பின்னர் கெரென்ஸ்கி போல்ஷிவிக் புரட்சியை தடை செய்யும் பொருட்டு பீட்ரோசிராட்டை ஜேர்மனியர்களிடம் சரணாகதி அடையச் செய்ய திட்டமிட்டதையும் ஒப்புவமையாக நினைவு கூர்வது பொருத்தமானது. தேசிய முதலாளி வர்க்கத்தின் 'தேசாபிமானம்' சகல வரலாற்று சாரம்களும் அற்றது என்பதை ஜயவர்தனவின் துரோகத்தின் படிப்பினை காட்டுகின்றது. இது முதலாளித்துவப் பேராசைக்கான பலவீனமான ஒரு வெறும் சாக்குப் போக்கே அத்தோடு இது எப்போதும் இதனை தனது அத்தியவசியமான வர்க்க நலன்களுக்கு கீழ்ப்படியச் செய்து கொண்டுள்ளது. இலங்கையில் முதலா... வடக்கில் இந்திய ஆக்கிரமிப்பு ... இனவாதம் என்ற இரட்டை ... இந்நிலைமை, எந்தவொரு நாட்... சிய, இன, மத குழுக்களின் ... பாட்டாளி வர்க்க தலைமையிலா... யின் ஊடாக மட்டுமே அடை... வரலாற்று உண்மையைச் சுட்டிக்...

(7) காந்தி — ஜயவர்தனவின் ... லாளி வர்க்கத்தின் முரட்டுத் ... துணைக் கண்டத்தில் அம்பலப்படு... ளையில் இந்த சமீபத்திய வரலா... சிய சுயநிர்ணயத்தை அடைய ... முதலாளித்துவ தேசியவாதத்தின்... ருசுபடுத்தி உள்ளது. அனைத்து ... நூற்றாண்டில் தாங்கும் வரலாற்... களில் உணர்ச்சித் தூண்டல்களு...

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளி...



...பமும் அதன் போராளிகளின் ... அக்கறையும் சொல்லியே ஆக ... தவறுவதற்கான மன்னிப்பு ஆகிவ... 29 ல் இருந்து தேசிய விடுதலைப்... மோசமான பின்னடிப்புக்களுக்கு ... கொள்கைகளே முக்கிய பொறுப்...

(8) இந்திய சூழ்ச்சியினதும் ... வாகவே தாம் புதுடில்லிக்கு வி... இலங்கை — இந்திய உடன்படிக்கை... இணங்கவும் தீர்மானம செய்ததா... கூறுகின்றனா. இந்தச் ''சட்டு ... புலிகள் இயக்கத்தின் கள்ளங்க... பட்டும் அன்றி, குட்டி முதலா... தின் அரசியல் மலட்டுத் தனத்... கின்றது. விடுதலைப் புலிகளின் ... ஏமாற்றப்பட்டிருப்பின் இதற்குக் ... த்தின் சுயநிர்ணயத்தினை அடை... கொள்கையும் இநதிய முதலாளி ... வேண்டுவதின் அடிப்படையிலேயே ... ருந்தது. இந்தப் பேரபத்து மி... க்கான மூலம் முதலாளித்துவ ... க்க முடியாத வர்க்க முன் நோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கை ஒப்பந்தமும்

# கழகத்தின் பணிகளும்

## ...க் குழுவின் அறிக்கை — நவம்பர் – 19 – 1937

...ில் முதலாளித்துவ ஆட்சி இன்று
...கிரமிப்பு தெற்கில் தமிழர் விரோத
...ாட்டை தூண்களில் தங்கியுள்ள ...
...ாரு நாட்டின் உள்ளும் சகல தே
...ழக்களின் ஜனநாயக சமத்துவம்
...லைமையிலான சோசலிசப் புரட்சி
...ம அடைப்பட முடியும் என்ற
...பச் சுட்டிக் காட்டுகின்றது.

...்தனுவின் சதிகள் தேசிய முத
...முரட்டுத் தன்மையை இந்தியத்
...அம்பலப்படுத்தி உள்ள அதே வே
...திய வரலாற்று அனுபவங்கள் தே
... அடைய இலாயக்கற்ற குட்டி
...பவாதத்தின் வங்குரோத் தையும்
...அனைத்து மக்களதும் தலைவிதி
...ம் வரலாற்று நெருக்கடிக் காலங்
...ண்டல்களுக்கு இடமேயில்லை.

...ப் புலிகளின் நிலைக்கான அனுதா



...ாளிகளின் தலைவிதியைப் பற்றிய
...ிய ஆக வேண்டியதை சொல்ல
...ிப்பு ஆகிவிடாது: 1987 ஜூலை
... விடுதலைப் போராட்டம் கண்ட
...ப்புக்களுக்கு விடுதலைப் புலிகளின்
... பொறுப்பாகும்.

...சியினதும் மோசடியினதும் விளை
...ல்லிக்கு விமானத்தில் செல்லவும்,
...டன்படிக்கையின் வாசகங்களுக்கு
... செய்ததாக பிரபாகரன் இன்று
...'சட்டு தமிழ் ஈழ விடுதலைப்
...கள்ளங்கபடம் அற்ற தன்மையை
...டி முதலாளித்துவ தேசியவாதத்
...தெ தனத்தையும் அம்பலப்படுத்து
... புலிகளின் தலைவர் காந்தியினால்
... இதற்குக் காரணம், தமிழ் ஈழ
...னை அடைவதில் அதன் முழுக்
... முதலாளி வர்க்கத்தின் உதவியை
...டையிலேயே கட்டி எழுப்பப்பட்டி
...ாபத்து மிக்க தவறுன கணிப்பு
...ளித்துவ தேசியவாதத்தின் தவிர்
... முன் நோக்கும், வேலைத்திட்டமு

மே அகும். 70 வருடங்களுக்கு முன்னர் லெனின், ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் தனது சொந்த தேசிய சிறப்புரிமையை அடையவும் 'சுதந்திர' நாட்டினுள் தொழிலாளர் விவசாயிகளைச் சுரண்டுவதற்கான சிறந்த நிலைமைகளை நிலைநாட்டும் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சுயநிர்ணயத்தினை சூல கொல்கின்றது என எச்சரிக்கை செய்தார். இந்தச் சுயநலம்; கூலி உழைப்பில் இருந்து உபரிப் பெறுமானத்தை பிடுங்கிக் கொள்கின்ற — அதாவது தொழிலாள வர்க்கத்தினை அடிமைப்படுத்துகின்ற — ஒரு வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கத்தின் தன்மையில் புற நிலையாக வேரூன்றி உள்ளது. இந்த வர்க்கப் புற நிலையானது முதலாளித்துவ தேசியவாதிகளின் சகல கன்னைகளதும் — தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் போன்ற பெரிதும் தீவிரமான போக்குக்கள் உட்பட — கொள்கைகளை வழி நடத்துவதோடு அவற்றின் அரசியல் உடல அமைப்பையும் நிர்ணயம் செய்கின்றது.

ஒவ்வொரு படியிலும் முதலாளித்துவ தேசியவாதிகள் விடுதலைப் போராட்டம் ''கை கடந்து போய்'' ...

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக ஊர்வலம்

தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்துக்கு தொழிலாள வர்க்க தலைமையை கட்டியெழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடியது

...லாளித்துவ ஆட்சியின் பராமரிப்புக்கு ஒரு அச்சுறுத்தலாக இடமளிக்கா வண்ணம் பார்ப்பதில் அக்கறையாக உள்ளனர்.

(9) இதனால் ஒடுக்கப்படும் வெகுஜனங்களை அணி திரட்டுவதில் எல்லை வரையறைகள் விதிக்க நெருக்கப்பட்டனர் ஒடுக்கப்படும் பின்தங்கிய நாடுகளைச் சேர்ந்த முதலாளி வர்க்கம், ஏகாதிபத்திய ஒடுக்கு முறையின் விலங்குகளில இருநது தமது நாடுகளை விடுதலை செய்வதற்கு அவசியமான தவிர்க்க முடியாத முன் நிபந்தனையான சாவவ்யாபகத்தை அடைவதில் அங்க ஜீவியாக இலாயக்கற்று உள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், அக்டோபர் 23 ம் திகதிய 'தொழிலாளர் பாதை' யில் சரியாகக் குறிப்பிட்டது போல்:

''எனினும் தேசிய சிறப்புரிமைவாதத்தின் அடிப்படையில் தமது உரிமைகளை மட்டும் அடையும் ஒரு இயக்கத்தை கட்டி எழுப்புவதன் மூலம் தேசிய விடுதலையை அடைய முடியாது. நாம் வாழ்ந்து கொண்டுள்ள இன்றைய சகாப்தத்தில் அததகைய ஒரு இயக்கம் எவ்வளவு தான் பொதுஜன ஆதரவைத் திரட்டிக் கொள்ளினும் அது எதரி முதலாளி வர்க்க அரசுகளின் பலத்தின் முன் ஈடாட்டம் காண்கின்றது. குறிக்கப்பட்ட ஒரு ஒடு-

க்கப்படும் தேசிய இனத்தின் விடுதலை இயக்கமானது, ஜனநாயகத்துக்காக முழுமையாகவும், மனம் விட்டும் போராடும் ஒரு இயக்கத்தின் அன்யோன்ய அங்கமாக மட்டுமே முன் செல்ல முடியும்.

''தேசிய சிறப்புரிமைவாதம் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் அத்தகைய ஒரு இயக்கத்தின் பாகமாகுவதைத் தடை செய்கின்றது இதற்குக் காரணம் தேசிய சிறப்புரிமைவாதம், இறுதி அய்வுகளின் படி, தேசிய முதலாளிகள் தமது சொந்த நாட்டின் தொழிலாளர்களைச் சுரண்டவும், விவசாயிகளைக் கசக்கிப் பிழியவும் செய்யும் முயற்சிகளுடன் இணைந்து கொண்டுள்ளதே. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் பலவீனம் இதில் இருந்தே ஊற்றெடுக்கின்றது.

(10) இந்திய இராணுவத்தின் பயங்கரமான மக்கள் படுகொலைகளின் அழிவை உள்ளடக்கிய இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டதன் சோகமமான விளைபயன்களுக்கு இடையேயும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், இன்னமும் காந்தி ஆட்சியுடனான கூட்டின் இடிபாடுகளுக்கு இடையேயும் தொங்கப் பார்க்கின்றனர். அக்டோபர் 14 ம் திகதி அளவில் கூட, பிரபாகரன், இந்திய இராணுவத்தின் மக்கள் படுகொலை நடவடிக்கைகள் தப்பபிப் பிராயத்தின் அடிப்படையில் இடம் பெறுவதாகக் காட்ட முயன்று வந்தார். காந்திக்கு அனுப்பிய ஒரு செய்தியில் அவர் கூறியதாவது:

''இந்தியா போன்ற ஒரு ஜனநாயக நாட்டிற்கு தமது தலைவிதியை தாமே தெரிவு செய்து கொள்ளும் ஜனநாயக சுதந்திரத்தைக் கொண்ட மக்கள் மீது தனது கருத்தை துப்பாக்கி முனையில் திணிப்பது பண்பாக மாட்டாது.''

இந்திய 'ஜனநாயகம்' பற்றிய பிரபாகரனின் கண்டுபிடிப்பு அப்பாவித் தனத்துக்கு ஒரு நல்ல உதாரணம். கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள தமது வர்க்க எதிரிகளுக்கு எதிராக தொழிலாளர்கள், விவசாயிகளை சுயாதனமாக அணி திரட்டுவதைத் தடை செய்வதை நோக்கமாகக் கொண்ட தமிழ் வெகுஜனங்களை ஏமாற்றும் கேவலமான நடவடிக்கை.

(11) தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தமது, தேசிய சுயநிர்ணயத்துக்கான கோரிக்கையினை மதிப்பிழக்கச் செய்யவும் இல்லை அல்லது அத்தகைய ஒரு போராட்டத்தை உதவாக்கறையானதாக்கி விடவும் இல்லை. மாறாக அது தேசிய ஜனநாயக இயக்கத்தின் தலைவிதி ஒடுக்கப்படும் நாட்டின் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்துடன் பிணையுண்டு போயுள்ளதையும் மீண்டும் காட்டுகின்றது

ஜனநாயக இயக்கத்தின் தீர்வு காணப்படாத ஏனைய சகல பணிகளைப் போன்றே, தேசிய சுயநிர்ணயமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் மட்டுமே அடைய முடியும். உண்மையில் நான்காம் அகிலத்தின் இந்த வரலாற்று முன்நோக்கு; கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை சிங்கள — தமிழ் வெகுஜனங்களின் அனுபவங்களின் மூலம் துன்பகரமான முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த கால் நூற்றாண்டாக பப்லோவாத திரிபுவாதிகளின் அங்கீகாரத்துடன் சமசமாஜ கட்சியினர் இழைத்த சொல்லிடங்காத காட்டிக் கொடுப்புக்கள் இல்லையேல் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்துக்கும் இடையே ஒரு போதும் முறிவு ஏற்பட்டிராது. உண்மையில் 1964 ல் சமசமாஜக் கட்சி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தினுள் நுழை

★ 6 ம் பக்கம் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை. . .

[5 ம் பக்கத் தொடர்ச்சி]

ந்தலைமை, வர்க்கப் போராட்டம், தேசிய விடுதலைப் போராட்டம் இரண்டினதும் அபிவிருத்தியில் ஒரு வரலாற்று நீர் மேடாக விளங்கிற்று. இந்த வரலாற்றுக் காட்டிக் கொடுப்புக்கு முன்னர் தமிழ் வெகுஜனங்கள் தொழிலாள வர்க்கத்திடமிருந்து தலைமையை எதிர்பார்த்ததோடு, பாட்டாளி வர்க்கம் இலங்கை முதலாளி வர்க்கத்தை தூக்கி வீசியதும் தேசிய ஒடுக்குமுறை நீக்கப்பட்டு விடும் என நம்பியிருந்தது. இது 1953 ம் ஆண்டின் ஹர்த்தால் மூலமும் 1963 — 64 ம் ஆண்டின் 21 கோரிக்கைகள் இயக்கத்தின் மூலமும் சட்ட ரீதியில் பிரத்தியட்சம் ஆக்கியது.

சமசமாஜக் கட்சி சிங்கள முதலாளி வர்க்க அரசினைப் பேணிய வண்ணம் தேசிய ஒடுக்குமுறையை ஸ்தாபன ரீதியாக்கிய ஒரு அரசியலமைப்புச் சட்டத்தின் அமுலில் நிசமாகப் பங்கு கொண்டதன் மூலம் 1964 — 1972 க்கும் இடைப்பட்ட காலத்தில் முழு நிலைமையும் மாற்றம் அடைந்தது. சமசமாஜக் கட்சியினால் கைவிடப்பட்ட தமிழ் வெகுஜனங்கள் புதிய பாதையை தேடியதோடு, முதலாளித்துவ தேசியவாத அரசியலினுள்ளும் ஈர்க்கப்பட்டனர்.

(12) சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பு என்னவாக இருந்த போதிலும், முதலாளித்துவ தேசியவாதத்தின் கலை முடித்தனத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான ஒரே முன்நோக்கினை — தமிழரதும் இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினதும் இணைந்த போராட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரே முன்நோக்கே வழங்குகின்றது. இந்திய ஆக்கிரமிப்பு தமிழ் தேசிய இனத்தினதும் அத்தோடு தெற்கில் உள்ள சிங்கள வெகுஜனங்களினதும் ஒடுக்கு முறையின் வர்க்க அடிப்படையை அம்பலப்படுத்தியுள்ளது இது சிங்கள — தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்தின் மேலாதிக்கத்தின் கீழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை வர்க்கப் போராட்டத்துடன் இணைக்க வேண்டியதன் அவசியத்தை தோற்றுவித்துள்ளது திட்டவட்டமாகச் சொன்னால் தமிழ் ஈழத்தையும் சிறீலங்காவையும் கொண்ட ஐக்கிய சோசலிச அரசுகளின் பதாகையை உயர்த்த வேண்டியுள்ளது.

(13) நாற்றமெடுத்துப்போன முதலாளித்துவ அரசுகளின் கட்டுமானத்தின் மீதும் அவற்றின் செயற்கையான எல்லைகளின் கழுத்தறுப்பு வரையறைகளுக்குள்ளும் வெகுஜனங்களின் ஜனநாயக அபிலாசைகளையோ அல்லது அடிப்படையான சடத் தேவைகளையோ திருப்தி செய்ய முடியாது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் இருந்து ஏகாதிபத்தியம் எந்தவொரு தனி தேசிய அரசையும் பல்வேறு மொழி, மத, இனவாரி சேர்க்கைகளின் நிச ஜனநாயக சமத்துவத்தின் அடிப்படையில் சிருஷ்டிக்க இடமளிக்கவில்லை. தவிர்க்க முடியாத விதத்தில் ஏகாதிபத்திய அங்கீகாரத்துடனான 'சுதந்திரம்' என்பது வம்பில் பிறந்த அரசுகளை நிர்மாணிப்பதையே கருதியது. இவை ஜனநாயக அடிப்படைக் கொள்கைகளின் ஆபத்தான சமரசங்களுக்கு செல்வதன் அடிப்படையில் இவை நிறுவப்பட்டன. இந்தத் தொடரில், தேசிய முதலாளி வர்க்கம் ஒடுக்கப்படும் வெகுஜனங்களின் விடுதலையாளனாக அன்றி, ஏகாதிபத்திய கொள்ளையின் கனிஷ்ட பங்காளனாகத் தொழிற்பட்டது. இந்த முறையில் சிருஷ்டிக்கப்பட்ட அரசானது ஒழுக்கக் கேடான முதலாளித்துவத்தின் ஒரு சிறைக் கூடத்துக்கு அப்பால் செல்லாததோடு அங்கு உற்பத்தி சக்திகளின் முற்போக்கு அபிவிருத்தி முடியாது போயிற்று.

(14) இந்த முதலாளித்துவ அரசுகள் மேலான ஏகாதிபத்தியவாதிகளின் மேலாதிக்க விளைவுகள் நன்கு பிரசித்தமானது. உறுதியான உள்ளூர் கைத் தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியாத அவற்றின் பொருளாதார தலைவிதியானது ஒரு சில மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன் பிணைக்கப்பட்டுள்ளது பிரமாண்டமான திருப்பிச் செலுத்த முடியாத கடன் பளுவினாலும், பரந்த அளவிலான படிப்பறிவின்மை, நோய்கள், பட்டினியால் பின்தங்கிய நாடுகள் திக்குமுக்காகுகின்றன. உள்ளூர் கைத் தொழில்கள் நிறுவப்பட்டுள்ள அருகாமையான இடங்களில் கூட இவை முற்றிலும் ஏகாதிபத்திய கட்டுப்பாட்டுக்குட்பட்ட பல்தேச உற்பத்தியின் ஏகாதிபத்திய அதி இலாப மூலங்களாகவே முற்றிலும் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய போலி பொருளாதார அபிவிருத்தியானது ஒடுக்கப்படும் சனத்தொகையின் தேசிய நலன்களுக்கு எதுவித பங்களிப்பையும் செய்வதில்லை. முதலாளி வர்க்கத்தின் மகிழ்ச்சிகரமான அங்கீகாரத்துடன் உருவாகும் அத்தகைய நிலைமைகளில் இனவாத யுத்தங்களின் பயங்கரம் நிலவுகின்றது. இந்நிலைமையை முதலாளி வர்க்கம் தொடர்ந்து ஆட்சி செய்யும் வரை மாற்றி அமைத்துவிட முடியாது சுதந்திரத்துக்குப் பின்னைய இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், பர்மா முதலான நாடுகளின் வரலாற்று, உண்மையில் உலகின் மாஜி காலனித்துவ நாடுகள் ஒவ்வொன்றினதும் வரலாறு — முதலாளி வர்க்கம் நிச தேசிய இணைப்பினையும், அரசியல் சுதந்திரத்தினையும் நிலைநாட்ட முடியாது என்பதை திர்க்கமாக நிரூபித்துள்ளது.

(15) வரலாறு, ஸ்டாலினிஸ்டுகள், திரிபுவாதிகள், குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளின் எதிர்ப்புகளுக்கு இடையேயும் இப்பணியை பாட்டாளி வர்க்கத்திடம் கையளித்துள்ளது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை தார்த்தமாக்கக் கூடிய ஒரே சமூக சக்தி இதுவே. எனினும் இது இதனை தேசிய முதலாளி வர்க்கத்தின் ஒரு பின்னிணைப்பாக அன்றி அதன் மூர்க்கமான எதிரி என்ற முறையிலேயே செய்கின்றது. தனது சொந்த ஆயுதங்களுடனும் தனது சொந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையிலும் கிராமங்களிலும், நாட்டுப்புறங்களிலும் உள்ள சகல ஒடுக்கப்படும் வெகுஜனங்களை தன்பின் அணி திரட்டிக் கொண்டு போராடுகின்றது. சகல ஒடுக்கப்படும் மக்களினதும் நியாயபூர்வமான ஜனநாயக உரிமைகளை தனது சாவாதிகாரத்தை நிலைநாட்டும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான சோசலிசப் புரட்சியின் ஒரு உப — உற்பத்திப் பொருளாகவே சுயநிர்ணயம் ஈட்டப்படுகின்றது தேசிய இனங்களின் நிசமான சமத்துவத்துக்கான திட்டமாக இது சுய விருப்பின் அடிப்படையில் ஒரு ஐக்கிய சோசலிச ஒன்றியத்தின் சிருஷ்டியை பிரேரிக்கின்றது.

சகல ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் சுய விருப்பில் இணைய வைப்பதானது பொருளாதார, கலாச்சார முன்னேற்றத்துக்குச் சிறந்த வாய்ப்பினை அளிக்கும் என்ற நம்பிக்கையில் பாட்டாளி வர்க்க சாவாதிகாரமானது பிரிந்து செல்ல விரும்பும் தேசிய இனங்கள் அங்ஙனம் செய்யும் உரிமையைக் கொண்டிருக்கவும் உத்தரவாதம் அளிக்கின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் முன்வைக்கப்பட்டு உள்ள தமிழ் ஈழம், சிறீலங்காவின் ஐக்கிய சோசலிஸ்ட் அரசுகளின் வேலைத்திட்டத்தின் அத்தியாவசியமான உள்ளடக்கம் இதுவே தான்,

(16) இந்தப் போராட்டத்துக்காக முக்கிய தடை, இந்திய — இலங்கை ஆளும் வர்க்கங்களுடன் சமசமாஜ — ஸ்டாலினிஸ்டுகள் கொண்டுள்ள கைக்கூலி உறவுகளே. ஜயவர்தன ஆட்சியுடனான அவர்களின் மறைமுக கூட்டரசாங்கம் ஐக்கிய அரசினைக் காக்கும் நடவடிக்கையின் தவிர்க்க முடியாத விளைவேயாகும். இவ் இரு கட்சிகளிலும் எதுவுமே முதலாளித்துவத்தில் இருந்து ஒரு துளி அளவும் சுயாதீனம் அற்றவை. கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறானது உண்மையில் ஸ்டாலினிசத்தின் முழு வரலாற்றினுள்ளும் வேரோடி உள்ளது சமசமாஜக் கட்சியைப் பொறுத்தமட்டில் அது தனது கடந்தகால புரட்சிகர வரலாற்றுத் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துக் கொண்டு விட்டது இப்பலம் எங்ஙனம் வீழ்ந்தது? தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமான கொல்வின் ஆர். டி. சில்வாவின் கடந்த கால ஆக்கங்கள் மார்க்சிச இலக்கியத்தின் நிச மாபெரும் படைப்புகளாகும். அவற்றை இன்று வாசிக்கையில் அவை இன்னமும் தலைமை தாங்கும் கட்சியின் முழு அரசியல் பக்கத்துக்கும் எதிரான குற்றப் பத்திரமாக அவை விளங்குகின்றன சமசமாஜ கரத்தையை எல். எஸ். எஸ். பி குதிரையில் கட்டுவதன் மூலம் டி சில்வா இத்தீவில் உள்ள பிரபாக்கு இனவெறிச் சக்திகளுக்கு அளப்பரிய வித்தத்தில் கைகொடுத்து உள்ளார். சிங்கள அரசினை காக்கும் அக்கறையற்ற தொழிலாள வர்க்கத்தின் நலன்களுக்கு எதிராக ஜயவர்தன ஆட்சியின் படுமோசமான குற்றங்களுக்கு சமசமாஜக் கட்சி கூட்டுப் பொறுப்பு ஏற்றுள்ளது.

(17) மேலும் வடக்கு — கிழக்கில் இந்தியர்களின் பிரசன்னத்தை அங்கீகரிப்பதன் மூலம் இது ஒடுக்கப்படும்

★ 7 ம் பக்கம் பார்க்க ம்

## நிரந்தரப் புரட்சி . .

★ 2 ம் பக்கத் தொடர்ச்சி

ங்கை ஒப்பந்தத்தின் மூலம் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வட — கிழக்கை ஆக்கிரமித்து இருக்கின்றது சமசமாஜக் கட்சி ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் சகல விதமான மத்தியவாத குழுக்களும் இந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவு கொடுக்கின்றார்கள். இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு சில நன்மைகள் கிடைப்பதாக கூறுகின்றார்கள்.

ஆனால் இன்று வட — கிழக்கு மாகாணத்தில் நடப்பது என்ன? சிறீலங்கா இராணுவம் நான்கு வருடங்களாக நடாத்தி வந்த படுகொலைகளையும், அழிவுகளையும் இந்திய இராணுவம், உலகில் நான்காவது இராணுவம் என்ற முறையில் இரண்டு மாதத்தில் செய்து முடித்திருக்கின்றது. இந்திய இராணுவமும், இலங்கை இராணுவமும் கூட்டாக இணைந்து விடுதலைப் போராளிகளை அழிப்பது மாத்திரம் அல்ல சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை கொன்று குவித்து உள்ளார்கள், நூற்றுக்கணக்கான பெண்களை மிருகத்தனமாக கற்பழித்து உள்ளார்கள். இவை தான் தமிழ் மக்களுக்கு வழங்கிய துரோகிகள் கூறும் சலுகைகள்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மாத்திரம் தான் தொழிலாள வர்க்க நிலைப்பாட்டிலிருந்து இவ் ஒப்பந்தத்தின் ஆபத்தை பற்றியும், தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கும் ஒப்பந்தம் என்பதையும் மிகவும் சரியாக சுட்டிக் காட்டியது இந்திய — இலங்கை இராணுவத்தை வட — கிழக்கில் இருந்து வெளியேற்றவும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகவும், இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை நிராகரிக்கும் படியும் பிரச்சாரத்தையும், கூட்டங்களையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்தியது.

தமிழ் முதலாளித்துவ தலைமைகளான அமிர்தலிங்கம், சந்திரகாசன் போன்ற தலைமைகள் இந்திய முதலாளித்துவத்தின் கால்களை நக்கியவாறு இந்திய இராணுவத்தின் தலையீட்டை வேண்டிக் கொண்டார்கள். ஏனைய குட்டி முதலாளித்துவ இயக்கங்களான ரெலோ, ஈ பி. ஆர். எல். எப்., புளொட், ஈரோஸ் இந்திய முதலாளித்துவத்துடன் இணைந்து கொண்டு,

★ 7 ம் பக்கம் பார்க்கவு

ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - இலங்கை...

[6 ம் பக்கத் தொடர்ச்சி]

சிங்கள விவசாயிகளின் நியாயமான தேசிய உணர்வுகளை இரக்கமற்ற முறையில் புறக்கணிப்பதோடு, படுபிற்போக்கு மக்கள் விடுதலை முன்னணியினதும் அதன் நம்பிக்கை மிக்க சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களதும் கரங்களைப் பலப்படுத்துகின்றது. இக்கொள்கை, குட்டி முதலாளித்துவ வெகுஜனங்களின் கண்களில் தொழிலாளர் இயக்கத்தை செல்வாக்கு இழக்கச் செய்யவும், சிங்கள இனவெறியின் அடிப்படையிலான பாசிச இயக்கத்தின் பெருக்கத்துக்கும் உதவுகின்றது. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தினை இலங்கை முதலாளி வர்க்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்துடனும், அத்தோடு இந்த வர்க்கப் போராட்டத்தினை சிங்கள, தமிழ் வெகுஜனங்களை ஜனநாயக ரீதியாக ஐக்கியத்துடன் இணைப்பதற்குப் பதிலாக சமசமாஜக் கட்சி ஒடுக்கப்படும் சனத்தொகையின் சகல பிரிவினரையும் அன்னியமாக்க சாத்தியமான அனைத்தையும் செய்து வருகின்றது. இது இந்திய ஆக்கிரமிப்பினை பெருமை பாராட்டுகின்றது தமிழர்களை ஒழித்துக் கட்டுவதை ஆதரிக்கின்றது. தெற்கில் ஜயவர்தனாவின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை அங்கீகரிக்கின்றது. சமசமாஜக் கட்சியின் கொள்கைகளின் அச்சாணி ஒரு சோசலிச, ஜனநாயக வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தினை சுயாதீனமாக அணி திரட்டுவதை நிராகரிப்பதே.

(18) சம்பவங்களின் முழுப் போக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டத்தினை ரூசுப்படுத்தியுள்ளது. இது மட்டுமே வடக்கில் உள்ள தமிழ் தொழிலாளர்களுக்கும் தெற்கில் உள்ள சிங்களத் தொழிலாளர்களுக்கும் இடையே பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத மூலோபாயத்தினை பேணுகின்றது.

மேலும் கடந்த வருடம் இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்துடனான நெருங்கிய தோழமை உறவின் மூலம் பு. க. க. பல்கோடி இந்திய தொழிலாள வர்க்கத்தினுள்ளே ட்ரொட்ஸ்கிச கொள்கைகளுக்கான போராட்டத்தினை விரிவுபடுத்தி உள்ளது. இதுவும் கூட இந்திய, இலங்கைத் தொழிலாள வர்க்கங்களின் தலைவிதியானது பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளதோடு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான அவர்களின் போராட்டம் ஒரு கூட்டுப் போராட்டம் என்ற உண்மையை அங்கீகரிப்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு நனவான தீர்மானமாகும்.

(19) இன்றைய தீர்க்கமான கட்டத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை எதிர் நோக்கும் அவசரமான பணி கூடிய கெதியில் தன் சக்திகளை விரிவுபடுத்துவதே. இதற்கு சமசமாஜ, கம்யூனிச கட்சிகளுடன் யூ என் பி. அரசாங்கத்துடன் கொண்டுள்ள கூட்டுகளுக்கு எதிரான போராட்டத்தினை தீவிரமாக்க வேண்டியுள்ளது. பு. க. க. சரியாகக் குறிப்பிட்டவாறு:

''ஒரே முனைவழிப் பாதை; வடக்கு — கிழக்கில் இருந்து இந்திய — இலங்கை ஆக்கிரமிப்புப் படைகளை உடனடியாக வாபஸ் பெறக் கோரவும் தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்கப் போராடவும் தொழிலாள வர்க்கத்தை முதலாளி வர்க்கக் கட்சிகளில் இருந்து சுயாதீனமாக அணிதிரட்டப் போராடுவதும், சிங்கள, தமிழ் பேசும் மக்களின் ஒரு சோசலிசக் குடியரசை கருவும் முன்னோக்கின் அடிப்படையில் யூ. என் பி அரசாங்கத்தை வெளியேற்றுவதுமே''

(20) தெற்கில் யூ. என். பி அரசாங்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் எதிரான தொழிலாள வர்க்கத்தின் சகல வடிவிலான போராட்டங்களின் தலைமையில் தன்னை அமர்த்திக் கொள்ள பு க க போராடியாக வேண்டும் இப்போராட்டத்தில் தீர்க்கமான அம்சம் இதுவே உலகப் பொருளாதார நிலைமையின் சீர்கேடு தொடர்வரும் மாதங்களில் உலகம் பூராவும் உள்ள தீவிரவாதிகளால் மறக்கப்பட்டு விட்ட ஒரு சக்தியான இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினை ஒரு புதிய எதிர்த் தாக்குதலில் இறங்கத் தூண்டும் சரியான புரட்சிக் கொள்கையால் ஆயுதபாணி ஆக்கப்பட்ட இது எதிர்வரும் தாக்குதல் இலங்கையினதும் இந்தியத் துணைக்கண்டத்தினதும் முழு அரசியல் சமன்பாட்டினையும் மாற்றி அமைக்கும். சமசமாஜ — கம்யூனிச கட்சிகளின் காட்டிக் கொடுப்புக்களையும் கிராமிய வெகுஜனங்களின் அவலங்களையும் அடிப்படையாகக் கொண்டு மக்கள் விடுதலை முன்னணி நாட்டுப் புறங்களில் நடாத்திய ஊடுருவல்கள், சிங்கள விவசாயிகளுக்கு ஒரு புதிய முன்னோக்கினை தொழிலாள வர்க்கத்தின் எழுச்சி வழங்கியவுடன் குழி பறிந்து போகும்.

(21) கடந்த சில மாதங்களுள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சிரமத்துடன் ஈட்டிய கவர்ச்சியான வெற்றிகளை அனைத்துலகக் குழு பெரும் திருப்தியுடன் அவதானித்துக் கொண்டுள்ளது. அரசாங்க ஒடுக்குமுறைக்கும் சிங்கள இனவாத குண்டர் கும்பல்களின் அட்டூழியங்களுக்கும் முன்நிலையில் இது மட்டுமே தொழிலாள வர்க்கத்தின் பேரில் இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு எதிராக பகிரங்கமாக பிரச்சாரம் செய்தது. இந்தச் சகல கஷ்டங்களுக்கு இடையிலும் இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு எதிரான இதன் சமீபத்திய கொழும்பு, கண்டி, யாழ்ப்பாண வெற்றிகரமான பொதுக் கூட்டங்கள், பு. க. க சிங்கள. தமிழ் வெகுஜனங்களிடையே பெரும் வெற்றிகளை ஈட்டிக் கொள்ளும் நிலையில் இருந்து வருகின்றது என்பதை — தெற்கில் சமசமாஜ — கம்யூனிச கட்சிகளிடமிருந்தும், வடக்கில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இருந்தும் சக்திகளைக் கைப்பற்றும் நிலையில் உள்ளதை — சுட்டிக் காட்டுகின்றது.

நவம்பர் 12 ல் கொழும்பு நகரில் பு க க. வின் நான்கு முன்னணி காரியாளர்களை — தேசிய செயலாளரின் சகோதரர் உட்பட — கொலை செய்ய இடம் பெற்ற யூ என். பி யின் முயற்சிக்கு பின்னணியில் இந்தத் தேட்டங்கள் உள்ளன. தொழிலாள வர்க்கத்தின் உள்ளும் இளைஞர்கள் இடையேயும் ட்ரொட்ஸ்கிச செல்வாக்குகள் எழுச்சி அடைவதைக் கண்டு இலங்கை முதலாளி வர்க்கம் கொண்டுள்ள அச்சத்துக்கு பு. க. க. அங்கத்தவர்களுக்கு எதிரான மக்கள் விடுதலை முன்னணியின் கொலைப் பயமுறுத்தல்கள் இன்னுமோர் எடுத்துக் காட்டாகும். இந்தத் தாக்குதல்களையும், அச்சுறுத்தல்களையும் பு க. க. அவசியமான பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடன் எதிர் கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாள வர்க்கத்தின் உள்ளே அது நடாத்தி வரும் புரட்சிகர வேலைகளை உக்கிரமாக்க வேண்டும்.

- தமிழ் ஈழத்தில் இருந்து இந்திய துருப்புக்களை வெளியேற்று! தமிழ் விடுதலைப் போராட்டத்தில் கை வைக்காதே!
- காந்தி — ஜயவர்தன உடன்படிக்கை ஒழிக!
- தமிழ் ஈழம், இலங்கை ஐக்கிய சோசலிச அரசுகளுக்கான போராட்டத்தின் தமிழ், சிங்கள தொழிலாளர்களை ஐக்கியப்படுத்து!
- சிங்கள தமிழ் தொழிலாள வர்க்கத்தின் முன்னணிப் படை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நீடூழி வாழ்க!
- நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு நீடூழி வாழ்க!

## தோழர் கீர்த்தி பாலசூரியாவிற்கு.

★ முன் பக்கத் தொடர்ச்சி

ரணையின் பின்னர் மருதானை மாளிகாகந்தை வீதியிலுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக தலைமைக் காரியாலயத்தில் டிசம்பர் 19 ம் திகதி மாலையில் இருந்து பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது பு. க கழக மத்திய குழு உறுப்பினர் பூசவுடலை ஏற்று அவ்விடத்தில வைத்த பின்னர் தோழர் கீர்த்தியுடன் நீண்ட காலமாக அரசியல் சகபாடிகளாக விளங்கிய நான்கு போஅறை மணி நேர பூதவுடலை காவல் செய்து இறுதிக் கௌரவத்தை தொடக்கினர். இதனை பின் பு. க. கழகத்தினதும் 'இளம் சோசலிஸ்டுகள்'' உறுப்பினர்கள் நாலவர், நல்பாக பூதவுடலை பாதுகாத்து அடக்கம் செய்யப்படும் வரையில் புரட்சிகர வணக்கத்தை செலுத்தினர்.

★ 8 ம பக்கம் பாரக்கவும்

## நிரந்தரப் புரட்சி...

★ 6 ம் பக்கத் தொடர்ச்சி

ஒப்பந்தத்தை சரியாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கூறிவாறு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிரான தாக்குதலை தொடுக்கின்றார்கள். இன்று இந்திய இராணுவத்திற்கு எதிராக இராணுவ ரீதியான தாக்குதலை மேற் கொண்டு இருக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழ் மக்களின் பாதுகாப்பை ராஜீவ் காந்தியின் கையில் கையளிப்பதாக ஏற்கனவே அறிவித்திருந்தது.

ஆனால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மாத்திரம் தான் இத்தகைய குட்டி முதலாளித்துவ அரசியலுக்கு எதிராக, ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கத் தமிழ், சிங்கள, இந்திய தொழிலாள வர்க்கத்தை அணி திரட்டப் போராடியது.

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் உணவு பொட்டலங்களை போட்ட போது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மாத்திரம் அதன் ஆபத்தை சுட்டிக் காட்டியது. மேற் கூறிய ஏனைய இயக்கங்கள் இந்திய முதலாளித்துவத்திற்கு நன்றி கூறினார்கள். இக்கால கட்டத்தில் தோழர். கீர்த்தி பாலசூரிய எழுதிய ''வங்காளதேச விடுதலைப் போராட்டத்தில் இந்திய முதலாளித்துவத்தின் எதிர்ப்புரட்சி தலையீடு'' என்ற கட்டுரைகளை நாங்கள் யாழ்ப்பாணத்தில் விநியோகித்தோம்.

தோழர், கீர்த்தி வங்காள தேச விடுதலைப் போராட்டத்தில், இந்திய இராணுவத்தின் தலையீட்டுக்கு எதிரான போராட்டம் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க இந்திய இராணுவத்தின் தலையீட்டுக்கு எதிராக புரட்சிக கம்யூனிஸ்ட் கழகம் தொடுத்த போராட்டத்திற்கு மையமாக இருந்தது.

தோழர். கீர்த்தி பாலசூரியாவின் மரணம் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும், உலகத் தொழிலாள வர்க்கத்திற்கும் பாரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளது அவர் மரணம் குறித்து எதிரிகள் சந்தோசப்படலாம். ஆனால் அவரின் அரசியல் பள்ளியில் பயிற்றப்பட்ட நாங்கள் அவரின் கொள்கைகளை மிகவும் துணிகரமாக முன்னெடுத்துச் செல்வோம் என ஆணித்தரமாக கூறி வைக்க விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கீர்த்தியின் வாழ்க்கையின். . .

★ முன் பக்கத் தொடர்ச்சி

...யை புரிந்து கொண்டார் இதன் அடிப்படையிலேயே அவர் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் தொடர்பு கொள்ள முடிவு செய்தார்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் 1968 ல் நடாத்திய முதலாவது மகாநாட்டில் 19 வயது இளைஞனாக விளங்கிய தோழர். கீர்த்தி பாலசூரிய, முதலாவது பொதுச் செயலாளர் பதவியை ஏற்கவும் முடிவு செய்தார். இது ஒரு விதத்தில் 1964 ல் லங்கா சமசமாஜக் கட்சி இழைத்த மாபெரும் காட்டிக் கொடுப்பின் கேவலத்தின் அளவைக் காட்டிற்று. அவர்கள் ஒரு தலைமுறையின் புரட்சிகர இயக்கத்தினை நாசமாக்கி இருந்த தருணத்தில் புதிய தலைமுறைக்கு கீர்த்தி போன்ற தோழர்கள் புரட்சித் தலைமையை கட்டி எழுப்பும் பொறுப்புக்கு தோள் கொடுக்க நேரிட்டது.

1964 — 70 ல் சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் துரோகக் காட்டிக் கொடுப்பின் பெறுபேறாக இளைஞர்கள் மத்தியில் கையாலாகத்தனமான நடவடிக்கைகள் பரந்த அளவில் காணப்பட்டன. தோழர். கீர்த்தி பாலசூரிய உள்ளடங்கலான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நான்காம் அகிலத்துடன் இணைந்து நின்றதாலேயே இவற்றினை எதிர்த்துப் போராட முடிந்தது.

துரோக கூட்டரசாங்க அரசியல் மூலம் குழப்பத்தில் தள்ளப்பட்ட இளைஞர்கள் மக்கள் விடுதலை முன்னணிக்கு பலியான வேளையில் அவர்களின் குட்டி முதலாளித்துவ அரசியலை அம்பலப்படுத்தி தோழர் கீர்த்தி பாலசூரிய எழுதிய 'மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலும் வர்க்கத் தன்மையும்' என்ற கட்டுரைத் தொடர் 1970 ம் ஆண்டின் கடைப் பகுதியில் 'கம்கறு புவத்' பத்திரிகையில் வெளியாகியது இது புகழ் பெற்ற மார்க்சிச நூலாக வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

"கூட்டரசாங்கத்தில் நுழைந்த சமசமாஜ — கம்யூனிஸ்ட் துரோகத் தலைவர்கள் முதலாளிகளுடன் இணைந்து தொழிலாள வர்க்கத்திற்கு நடாத்திய தாக்குதல்களுக்கு எதிராக சகல அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் காப்பதில் தோழர். கீர்த்தி, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை ஈடுபடுத்தினர். தோழர். கீர்த்தி தமது கைகளினாலேயே பத்திரிகை விற்று கட்டி எழுப்பிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசாங்க அசக்கின் 1972 ம் ஆண்டின் இனவாத சிங்கள பௌத்த முதலாளித்துவ அரசியலமைப்புச் சட்டத்தினைச் சவால் செய்ய நமது தொழிற்சங்க கிளையை ஈடுபடுத்தியமை த செயலானதல்ல. கூட்டரசாங்கத்தினால் வெட்டப்பட்ட இலவசக் கல்வியைக் காக்கவும், வேட்டைக்கு இலக்கான அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், தோழர் கீர்த்தியின் தலைமையின் கீழ் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்னணியில் நின்று வந்தது.

"நாம் இங்கு கஷ்டப்பட்டு அரசியல் பேசவில்லை தோழர். கீர்த்தியின் வாழ்க்கை இந்நாட்டினதும் உலகத் தொழிலாள வர்க்கத்தினதும் தலைவிதியுடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டது. வர்க்கப் போராட்டத்தின் வரலாறு பற்றிப் பேசுவதன் மூலம் மட்டுமே தோழரின் வாழ்க்கையைப் பற்றிப் பேச முடியும். 1975 ல் லங்கா சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு, கூட்டரசாங்கம் சிதறுண்டு போகத் தொடங்கியதும், தோழர். கீர்த்தியின் தலைமையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைத்த முன்நோக்கின் பிழையற்ற தன்மை நிரூபிக்கப்பட்டது. கூட்டரசாங்கம் அரசியல் முறைகேடானது; தொழிலாள வர்க்கத்தை காட்டிக் கொடுத்ததன் மூலம் உண்டு பண்ணப்பட்டது புரட்சித் தலைமையை உருவாக்கினால் பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவத்தைத் தூக்கி வீசும் என்ற உண்மைக்கு உயிர் கூட்டும் என்பது கூட்டரசாங்கத்தின் வெடிப்பின மூலம் முன்னணிக்கு வந்தது.

1977 ல் யூ. என். பி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் போராட்டம் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனம், அரசாங்கத்தை வெளியேற்ற தொழிலாள வர்க்கத்தை சூழ வெகுஜனங்களை அணி திரட்டுவதிலும் ஈடுபட்டிருந்தது. பிற்போக்கு யூ. என். பி அரசாங்க இனவாத யுத்தத்தின் மூலம் தமிழ் தேசிய இனத்தின் தேசிய உரிமைகளை நசுக்க ஆரம்பித்ததில் இருந்து இது தீர்க்கமாக முன்னணியில் நின்று வந்தது. சமசமாஜ — கம்யூனிச — மத்தியவாத கட்சிகளின் தலைவர்கள் முதலாளித்துவ யூ. என். பி. — சிறீலங்கா முகாம்களுக்குள் பாய்கையில், இனவாத யுத்தத்துக்கு எதிராகம், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் தலைமையில் தொழிலாள வர்க்கத்தை அமர்த்தவும் தோழர் கீர்த்தி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் தமது முழுப் பலமும் கொண்டு போராடினார். இலங்கைத் தொழிலாள வர்க்க இயக்கத்துக்கு தலைமை வழங்கும் பொருட்டு அவர் உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்தினதும் அவ்வாறே இந்திய போல்ஷிவிக் — லெனினிசக் கட்சியினதும் சகல கடந்த கால உரித்துக்களுக்கு உயிரூட்டப் போராடினார்.

தொழிலாள வர்க்க இயக்கத்தின் வரலாற்றுடன் இணைந்த தோழர் கீர்த்தி பாலசூரியவின் புகழ் பூத்த புரட்சிகர வாழ்க்கையினை — சவால் செய்ய முடியாத அந்த வாழ்க்கை நெறியைப் பற்றி அவரின் எதிரிகள் குறை சொல்வதானால் அது தமது உடம்பல் அணுவளவேனும் சந்தர்ப்பவாதத்துக்கு இடம் அளிக்காததற்காகவே இருக்கும்.

அவர் சந்தர்ப்பவாதம் தலையெடுத்த போதெல்லாம் அதன் தலையில் அடித்து வந்தார். முதலாளித்துவத்துக்கும் அதன் ஏஜன்டுகளுக்கும் தம்மை விற்றுப் பிழைக்க துடிப்பவர்களையிட்டு அவர் எவ்வளவு வன்மம் கொண்டிருந்தார் என்பது அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும்.

# தோழர். கீர்த்தி பாலசூரியாவிற்கு. . .

★ 7 ம் பக்கத் தொடர்ச்சி

இறுதி மரியாதை செலுத்தும் பொருட்டு பூதவுடல் வைக்கப்பட்ட 5 தினங்களிலும் ஆயிரக்கணக்கானோர் கூடியதுடன், நூற்றுக்கணக்கானோர் இரங்கல் பதிவேட்டில் குறிப்புரை எழுதினர்.

டிசம்பர் 23 ம் திகதி தலைமைக் காரியாலயத்திலிருந்து பிற்பகல் 2.30 மணியில் இருந்து பூதவுடலை பொரளை கனத்தை மயானத்திற்கு கொண்டு செல்லும் மரண ஊர்வலத்தில் 600 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். பு க. கழக மத்திய குழு உறுப்பினரால் பூதவுடல் அடங்கிய பெட்டி மரணச் சடங்கு வாகனத்தில் வைக்கப்பட்டது நான்காம் அகிலத்தின் சிவப்பு பதாகையை தாங்கிய பு. கழக உறுப்பினரான படை வீரர் மரண ஊர்வலத்தில் முன்னணியில் சென்றதுடன் அதன் பின் கால் நடையாக பாதுகாப்பு வீரர்கள் நால்வர் காவல் புரிந்தவாறு மரணச் சடங்கு வாகனம் சென்றது. அவ்வாகனத்தை பின் தொடர்ந்து கால் நடையாக பு. க. கழக பதாகையின் கீழ் அதன் மத்திய குழு உறுப்பினர் சென்றனர்.

தோழர் கீர்த்தி பாலசூரிய உலகப் புகழ் பெற்ற ட்ரொஸ்கிச தலைவர் ஒருவர் என்றும் அவரது பாரிய சக்தியாச, உலகப் புரட்சியின் பிரச்சினைகளை தீர்க்க வல்ல பாட்டாளி வர்க்கம், சர்வதேச ரீதியாக போராட வேண்டும் என்பது விளங்கியதாகவும், அவருக்கு இறுதி மரியாதை தெரிவிக்க வந்திருந்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட அமெரிக்க தொழிலாளர் கழகத்தின் தேசிய செயலாளரான தோழர். டேவிட் நோர்த் மரணச் சடங்கு கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தோழர். கீர்த்தியின் தத்துவார்த்த அரசியல் தேட்டங்கள் உருவாகும் பாட்டாளி வர்க்க புரட்சிகர போராட்டங்களில் பாட்டாளி வர்க்க தலைமைத்துவத்தை வழங்குவதற்கு அத்தியாவசியமான தேட்டங்களாகும்' அவர் ஏகாதிபத்தியத்தினதும் ஸ்டாலினிசத்தினதும் புதிய ஏஜந்தான பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைமைகளான ஹீலி — பண்டா — சுலோற்றர் துரோகிகளது அரசியலை தோற்கடிக்க முன்னணியில் நின்றார். அவரது போராட்டத்தினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் முன்னெடுத்துச் செல்லுமென தோழர் நோர்த் குறிப்பிட்டார்.

தோழர். கீர்த்தி பிரபல அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்து இறுதி மூச்சு வரை ஈடுபட்டிருந்த முடிவற்ற போராட்டத்தை விபரித்துப் பேசிய பு. க. கழக மத்திய குழு உறுப்பினர் தோழர். விஜே டயஸ், அப்போராட்டம் உலகப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்டு விட முடியாத ஒன்றென கூறினர். செப்புக் காசு பெறுமதி இல்லாதவற்றிற்கு தம்மை முதலாளித்வத்திடம் விற்று விடும் வேளையை எதிர்பார்த்திருக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராக, கடும் போராட்டத்தினால் தொழிலாள வர்க்க கட்சியின் அனைத்துலகவாத அடிப்படையை நிலைநாட்ட தோழர். கீர்த்தி பாலசூரிய போராடினர்.

கூட்டத்தில் 'கம்கறு மாவத்த' 'தொழிலாளர் பாதை' ஆசிரியரும் பு. க கழக மத்திய குழு உறுப்பினருமான கே. ரத்னுயக்க, பு. க க. மத்தியகுழு உறுப்பினரான அரவிந்தன், நந்த விக்கிரமசிங்க, 'இளம்சோசலிஸ்டுகள்' தேசிய செயலாளர் சமன் குணதாச என்போர் உரையாற்றினர்.

தோழர் கீர்த்தியின் இறுதிச் சடங்குகளின் பின் கூடிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழுவானது அவரது போராட்டத்தின் சகல படிப்பினைகளையும் தொழிலாள வர்க்கம், ஒடுக்கப்பட்டவர்களிடம் கொண்டு செல்லும் முகமாக பாரிய அரசியல் போராட்ட தொடர்களின் ஊடாக ஸ்டாலினிஸ்டுகள், சீர்திருத்தவாதிகள், மத்தியவாதிகளுக்கும் எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்தி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை தொழிலாள வர்க்கத்தின் புரட்சிக் கட்சியாக நிலைநாட்டும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி 51 ம இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org